SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

<u>சுருக்கம்</u>

<u>பதிவுத்துறை – பதிவுத்துறையைச் சார்ந்து தொழில் புரிந்து வரும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக – "ஆவண எழுத்தர் நல நிதியம்" உருவாக்கப்பட்டது – திருத்திய ஆணை – வெளியிடப்படுகிறது.</u>

**<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2)துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.178**

**நாள் : 24.12.2021**
**பிலவ, மார்கழி – 09**
**திருவள்ளுவர் ஆண்டு, 2052**

**படிக்கப்பட்டவை :**

1. அரசாணை (நிலை) எண்.183, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள்28.10.2010.
2. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.37381/ எஸ்1/ 2021, நாள் 11.10.2021.

******

**<u>ஆணை:–</u>**

2007–2008–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆவண எழுத்தர் நலநிதியம் உருவாக்க கொள்கை அளவில் ஆணை வெளியிடப்பட்டு, நல நிதியத்திற்கான நிதி ஆதாரத்தை மொத்தமுள்ள 5600 ஆவண எழுத்தர்களிடமிருந்து உறுப்பினர் சந்தாவாக ஒவ்வொரு ஆண்டும் ரூ.1000/– வீதம் ரூ.56.00 இலட்சம் திரட்டலாம் எனவும் இவ்வாறு செயல்படுத்த உத்தேசித்துள்ள நலத்திட்ட உதவிகளுக்கு ஆகும் ஆண்டு செலவினம் ரூ.65.88 இலட்சம் என்பதால் இதில் ஏற்படும் பற்றாக்குறை தொகையான ரூ.9.88 இலட்சத்தினை அரசு மானியமாக வழங்கலாம் எனவும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேற்கண்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டு உரிய சட்டமியற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், 2021-2022ம் ஆண்டு மானிய கோரிக்கை எண்.11, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது "பதிவுத் துறையைச் சார்ந்து தொழில் புரிந்து வரும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எழுத்தர் நல நிதியத்தை முழுமையான செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும். நலநிதிய உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெறும் ஆவண எழுத்தர்களுக்கு பிற நல வாரியங்களில் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் போலவே ஓய்வூதியம், விபத்தில் மரணமடையும் நலநிதிய உறுப்பினர் குடும்பத்திற்கு நிதியுதவி, ஆவண எழுத்தர் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை போன்ற நலத்திட்டங்கள் வழங்கப்படும்" என்ற அறிவிப்பு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் வெளியிடப்பட்டது.

3. இந்த அறிவிப்பு தொடர்பாக மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கருத்துருவில் ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளதாலும், 2010-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களுக்கான உதவித்தொகை தற்போதைய பண மதிப்பீட்டின் அடிப்படையில் மிகக்குறைவாக உள்ளதாக கருதப்படுவதாலும் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நல திட்டங்களின் அடிப்படையில் தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியம் ஏற்படுத்துதல் தொடர்பாக கீழ்கண்ட விவரங்களை பதிவுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்:-

(a) அனைத்து பதிவு மண்டலங்களின் அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், 30.06.2021-ல் அன்றுள்ளபடி செயல்பாட்டில் உள்ள ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை 5188. இவர்களிடமிருந்து தொடக்க நிதியாக ரூ.1,000 வசூலித்தால் கிடைக்கக்கூடிய வருவாய் ரூ.51.88 இலட்சம் மட்டுமே ஆகும்.

(b) அரசு மானியம் ஏதும் பெறாமல் ஆவண எழுத்தர்கள் நல நிதியத்தில் பெறப்படும் நிதி ஆதாரங்களைக் கொண்டே ஆவண எழுத்தர்களுக்கான நலத்திட்டங்களை ஆவண எழுத்தர்கள் நலநிதியம் மூலமாக செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டபோது, பதிவிற்கு தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஆவண எழுத்தர் நல நிதியத்திற்கான பங்களிப்பு தொகையாக ரூ.10/-வசூலிக்கப்பட்டால், நல திட்டங்களுக்கான செலவுகளை ஈடு செய்ய இயலும். இதன் மூலம் அரசுக்கு கூடுதல் செலவு ஏதுமின்றி ஆவண எழுத்தர் நல நிதியத்தை செயல்படுத்த இயலும்.

(c) ஆவண எழுத்தர்கள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில் இத்திட்டத்தில் சேரலாம். தற்போதுள்ள துறையின் உரிமம் பெற்ற 5188 ஆவண எழுத்தர்களும் இத்திட்டத்தின் கீழ் சேருவதாக கருத்தில் கொண்டால் 5188 ஆவண எழுத்தர்களிடமிருந்து ஒருமுறை பெறப்படும் நிதி வருவாய் ரூ.51.88 இலட்சத்துடன் ஆவண பதிவின்போது வசூலிக்கப்படும் நல நிதிய பங்களிப்பும் சேர்க்கப்பட்டால், இதனைக் கொண்டு நலநிதியம் மூலம் ஆவண எழுத்தர்களுக்கான அனைத்து நலத்திட்டங்களையும் செயல்படுத்த இயலும்.

4. தற்போது நடைமுறையில் உள்ள

1. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்,
2. வணிகர் நல வாரியம்

ஆகிய நல திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையுடன், ஏற்கனவே அரசாணை எண்.183, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.10.2010-ன் கீழ் சொல்லப்பட்ட உதவித்தொகையினை ஒப்பீடு செய்யப்பட்டதில் பிந்தைய உதவித்தொகையின் அளவு குறைவாக உள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள பிற வாரிய திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகைக்கு ஈடாக ஆவண எழுத்தர் நல நிதியத்தின் உதவித் தொகைகளும் மறு கணக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது:-

| **ஆவண எழுத்தர் நல நிதியத்தில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள்** | உதவித்தொகை (ரூபாயில்) |
|---|---|
| a) விபத்தில் மரணம்<br>b) நிரந்தர ஊனம்<br>c) மற்ற உடல் ஊனங்கள் | 1,00,000<br>1,00,000<br>20,000 |
| இயற்கை மரணம் | 20,000 |
| திருமண உதவித் தொகை | 8,000 (ஆண்)<br>10,000 (பெண்) |
| மகப்பேறு கால உதவித்தொகை | 6,000 |
| <u>கல்வி உதவித் தொகை</u><br>a) பள்ளி இறுதி (S.S.L.C) படிப்பு உதவித் தொகை<br>b) பள்ளி இறுதி (S.S.L.C) தேர்ச்சி | <br>1,000<br>1,000 |

| | |
|---|---|
| a) மேல்நிலை (H.S.C) படிப்பு உதவித் தொகை<br>b) மேல்நிலை (H.S.C) தேர்ச்சி | 1500<br><br>1500 |
| a) தொழிற்கல்வி (I.T.I) படிப்பு<br><br><br><br><br>b) பட்டய படிப்பு (Diploma Course) | i) 2,000 (விடுதி அல்லாத மாணவர்களுக்கு)<br>ii) 2,500 (விடுதி மாணவர்களுக்கு)<br><br>i) 2,000 (விடுதி அல்லாத மாணவர்களுக்கு)<br>ii) 2500 (விடுதி மாணவர்களுக்கு) |
| c) பட்டப்படிப்பு | i) 3000 (விடுதி அல்லாத மாணவர்களுக்கு)<br>ii) 3500 (விடுதி மாணவர்களுக்கு) |
| d) முதுகலை / தொழிற்கல்வி | 10,000 |
| இறுதி சடங்கு நிதி உதவித்தொகை | 5,000 |
| ஓய்வூதிய உதவித் தொகை (60 வயதுக்கு மேல் ஆவணஎழுத்தர் உரிமங்களை ஒப்படைக்கும் நிகழ்வுகள்) | 1500 |
| மூக்குக்கண்ணாடி உதவித்தொகை | 1500 |

5. மேற்கண்ட சூழலில், பதிவுத்துறை தலைவரின் அறிக்கையினை ஏற்று ஆவண எழுத்தர் நலநிதியத்தினை முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.183, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.10.2010-க்கு மாற்றாக கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது:-

1. 30.06.2021-ன்படி ஆவண எழுத்தர் உரிமம் பெற்ற 5188 நபர்களிடம் ஆவண எழுத்தர் நல நிதியத்தில், விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர்களாக சேர நுழைவுக் கட்டணமாக ரூ.1000/- (ஒரு முறை மட்டும்) வசூலிக்கப்பட வேண்டும்.

2. பதிவு செய்யப்படும் ஆவணம் ஒன்றிற்கு தலா ரூ.10/- வீதம் பதிவுக்கு வருபவரிடம் ஆவண எழுத்தர் நலநிதியத்திற்காக வசூல் செய்யப்பட வேண்டும்.

3. ஆவண எழுத்தர்களிடமிருந்து விருப்பத்தின் அடிப்படையில் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படும் ரூ.1000/- மற்றும் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் நலநிதிய பங்களிப்பாக வசூலிக்கப்படும் ரூ.10/- ஆகியவற்றைக் கொண்டு நலநிதிய நலத்திட்டங்களுக்கான செலவுகள் ஈடு செய்யப்பட வேண்டும்.

4. அரசு நிதிஉதவி இல்லாமல் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால், மேற்படி நிதியத்திற்காக ஆவணம் பதிவு செய்யப்படும் போது வசூலிக்கப்படும் தொகை, வரவு கணக்குத் தலைப்பில், அரசு கணக்கில் நேரடியாக இணைய வழியாக செலுத்தப்பட வேண்டும். அக்கணக்குத் தலைப்பில் ஆண்டுதோறும் செலுத்தப்படும் தொகையின் அடிப்படையில் நிதியத்திற்கு இரண்டு தவணைகளாக மானியம் விடுவிக்கப்படும். முதல் தவணை விடுவிக்கப்பட்ட தொகைக்கு பயனீட்டு சான்று பெற்ற பின்னர் இரண்டாம் தவணை விடுவிக்கப்படும். இதற்கான புதிய செலவின கணக்கு ஏற்படுத்தி நிதி விடுவிக்கப்படும்.

5. ஆவண எழுத்தர் நலநிதிய உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் நல உதவிகள் பெறுவதற்கு தகுதிகள் மற்றும் நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

6. நலநிதிய உறுப்பினர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நலத்திட்ட உதவிகள் மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு வழங்கப்படும்.

7. ஆவண எழுத்தர் நலநிதிய உறுப்பினர் ஓய்வுபெறும் உச்ச வயது வரம்பானது 60 என நிர்ணயிக்கப்படும்,

8. நலநிதிய உறுப்பினர்கள் நலத்திட்ட உதவித்தொகை பெறுவதற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கைக்கான வருடாந்திர உச்சவரம்பு நீக்கப்படுகிறது.

9. நலத்திட்ட உதவித்தொகையானது பதிவுத்துறை தலைவரின் ஒப்புதலுடன் பதிவுத்துறை தலைவர் மற்றும் கணக்காளரால் கூட்டாக ஒப்பளிக்கப்பட வேண்டும் மற்றும் பயனாளிகளுக்கு ECS மூலம் மட்டுமே உதவித்தொகை வழங்கப்பட வேண்டும்.

10. ஆவண எழுத்தர் நல நிதியை நிர்வகிக்க உரிய சட்டமியற்றப்பட வேண்டும். மேலும் அதற்கேற்றவாறு விதிகளும் உருவாக்கப்பட வேண்டும். ஆவண எழுத்தர் நல நிதியை நிர்வகிக்க வேண்டிய உரிய அலுவலர்கள்/ உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 5-ல் உள்ள கருத்துகளின் அடிப்படையில், உரிய சட்டமுன் வடிவுடன் அதற்கான வரைவு விதிகளை அரசுக்கு அனுப்புமாறு பதிவுத்துறை தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி,
அரசு செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறை தலைவர், சென்னை -28.
மாநில கணக்காயர், சென்னை - 18.

**நகல்;**
நிதி (வருவாய்)த்துறை, சென்னை - 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அலுவலகம், சென்னை - 9.
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலகம், சென்னை - 9.
வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலரின் தனிச்செயலர், சென்னை -9.
வணிகவரி மற்றும் பதிவுத் (யு1)துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.